OPEN ACCESS

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.2.2020

Accepted: 11.3.2020

Published: 01.04.2020

Citation:
Chandran, A. (2020). From the perspective of 'Naan Du Nee' language structure: The Great Flower of Attraction - Poetry Text. *Shanlax International Journal of Tamil Research*, *4*(4), 79–87.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2403

*Corresponding Author:
chandran@shctpt.edu

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

From the Perspective of 'Naan X Nee' Language Structure: The Great Flower of Attraction - Poetry Text

Dr. A. Chandran*

Assistant Professor, Department of Tamil

Sacred Heart College (Autonomous), Tirupattur, Tamil Nadu, India

https://orcid.org/0000-0002-8884-3285

Abstract – There are two forms of reading in the Tamil literary context: the creation of the creator and the reading of the creation. Of these two reading modes, researchers are more concerned with the method of reading the work. More specifically, the need to explore the opposite properties of the language I (naan) x you (ni), which emerges in poetry, is now needed. This way of studying will lead to a complete understanding of creation and the mind of the Creator. The purpose of this article is to try to read the poetry of Mr. S. Shanmugam's Grace of Attraction. As you read this, you can see that most of the poems in the copy are built on the equation I (naan) x you (ni)= we (naam).

Key Words: Tamil modern poems, S. Shanmugam's poems, Cridicism of poetry, Structure of language.

References

1. Arumuga Navalar (Edi). (1956). *Ellakanakothu,* (6th Edition) Chennai, Vidyabhavana Press, NE 300.
2. Shanmugam, S. (2017). *Earpin perumalar,* (First Edition), Chennai, Bodhivanam Publishing.
3. Thamizhavan. (2019). *Tamilum mozhithal kotpadum*, (Second Edition), melum veliedu, Palayamkottai.
4. Thamizhavan. (1989). *Padaipum padaippalium*, (First Edition) Kavya, Bangalore.
5. Nagarasan Doctor, V (U). (2004). *kurunthogai mulamum uraium*, (First Edition), New Century Book House (P) Ltd, Chennai.
6. Jamalon. (2018). Pirathiel kilaikum bimbangal. (First Edition), Chennai, Timeline Publishing.

நான் x நீ மொழி அமைப்பு நோக்கில் ஈர்ப்பின் பெருமலர் கவிதைப் பிரதி

முனைவர் ஆ. சந்திரன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்

ஆய்வுச் சுருக்கம் *– படைப்பாளனை முன்னிறுத்தி வாசிப்பது, படைப்பை முன்னிறுத்தி வாசிப்பது என்ற இருவாசிப்பு முறைகள் தமிழ் இலக்கியச்சூழலில் உண்டு. இந்த வாசிப்பு முறைகளில் இரண்டாவதான படைப்பை முன்னிறுத்தி வாசிக்கும் முறையை ஆய்வாளர்கள் அதிகம் கவனத்தில் கொள்கின்றனர். அதிலும் குறிப்பாக, கவிதைப் பிரதிகளில் வெளிப்படும் நான் நீ என்ற மொழியின் எதிரெதிர் பண்புகளைப் பற்றி ஆராயும்முறை இப்போதையதேவையாகஉள்ளது. இவ்வாறானமுறையில்நிகழ்த்தப்படும்ஆய்வுகளின்மூலம் படைப்பையும் படைப்பாளனின் உள்ளத்தையும் முழுமையாக அறிய வழிவகுக்கும். அந்தவகையில் எஸ். சண்முகத்தின் ஈர்ப்பின் பெருமலர் என்ற கவிதைப் பிரதியை வாசிக்க முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாறு வாசிக்கையில் அந்தப் பிரதியில் உள்ள பெரும்பாலான கவிதைகள் நான் x நீ = நாம் என்ற சமன்பாட்டில் கட்டமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.*

முக்கியச் சொற்கள்: *தமிழ்க் கவிதை, எஸ். சண்முகம் கவிதைகள், மொழிஅமைப்பு, கவிதை விமர்சனம்.*

படைப்பாளனை முன்னிறுத்தி வாசிப்பது படைப்பை முன்னிறுத்தி வாசிப்பது என்ற இரு வாசிப்பு முறைகள் தமிழ் இலக்கியச் சூழலில் உண்டு. அதாவது, படைப்பாளன் - படைப்பு - வாசகன் என்ற முப்பரிமாணங்களைப் படைப்பாளன் + படைப்பு = வாசிப்பு என்றும், படைப்பான் x படைப்பு / வாசகன் (x = நீக்கல் என்ற பொருளில்) என்றும் இலக்கியவாதிகள் x வாசகர்கள் அணுகுகின்றனர். ஜமாலன் மொழியில் சொல்வதானால், பிரதி வாசிப்பவரை வாசகராகவோ அல்லது நுகர்வாளராகவோ மாற்றுகின்றது. வாசகராக மாற்றக்கூடிய பிரதிகளை வாசகப்பிரதி அல்லது படைப்பு என்று செல்லலாம், நுகர்வாளராக மாற்றும் பிரதியை நுகர்வுப் பிரதி அல்லது சரக்கு எனலாம்[1] படைப்பு என்ற சொல் பிரதி என்றாகின்றபோது படைப்பாளன் கொல்லப்பட வேண்டியவன் ஆகின்றான். அதாவது, பிரதி அல்லது பிரதிகள் என்பது அல்லது என்பன எழுத்துகளால் ஆனது அல்லது ஆனவை அல்லவா! அப்படி என்றால் எழுதப்படுபவை எழுத்துக்கள் அப்படித் தானே! அந்த எழுத்துக்கள் எழுதப்படுகின்றன. எழுதிப் பார்க்கப்படுகின்றன. அழித்துப்பின் எழுதப்படுகின்றன என்கிற பரந்துபட்ட புதுப்பார்வை பிரதியின் மீது விழுகின்றது. இந்த இடத்தில் தமிழவனின் படைப்பு - படைப்பாளன் பற்றிய கருத்தைக் குறிப்பிடுவது சரியாக இருக்கும் என்று நினைக்கின்றேன். சார்த்தர் சாமர்சென்.. கைலாசபதி, மார்க்ஸ், எங்கெல்ஸ்.. போன்றவர்களின்[2] அக / புற மற்றும் வாழ்வு / படைப்பு குறித்தான விவாதங்களை / முரண்பாடுகளை ஒப்பிட்டுக்காட்டி இறுதியாக இப்படி முடிக்கின்றார். பைரனின் உண்மையான மனைவியுடனான உண்மையான உறவுகளை

ஓர் கவிதை விளக்குகிறது. தாமஸ் மூர் கண்டிப்பாய் இதன் கையெழுத்துப் படியில் பைரன் கண்ணீர் சிந்தி எழுதியிருக்க வேண்டும் என்கிறார். இன்னொரு விமர்சகர் கையெழுத்துப் படியில் வாஸ்தவத்தில் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விழுந்திருக்காது என்று கேலி செய்தார். ஆஸ்டின் வாரனும் ரெனி வெல்லக்கும் இப்படிச் சொல்கின்றனர்: உகுக்கப்பட்ட அல்லது உகுக்கப்படாத கண்ணீர் இன்று மறைந்துவிட்டது. கவிதை மட்டும் மறையவில்லை[3]

அதாவது, படைப்பு வேறு; படைப்பவன் வேறு. தினசரி வாழ்விலிருந்து விடுபட்ட ஓர் உயர்ந்த வாழ்வு படைப்பு வாழ்வு[4] என்பது அவரது விளக்கமாகும். படைப்புதான் முக்கியம். படைப்பை முன்னிறுத்தத் தான் வாசகமனம் செல்லவேண்டும். அப்போது தான் படைப்பு அல்லது பிரதி என்பது வாசகனுக்கு ஒரு மையம் நோக்கிய வாசிப்பு x மைய விலக்கல் வாசிப்பு, நேர்க்கோட்டு வாசிப்பு x முன்பின் வாசிப்பு, ஒருமுக வாசிப்பு x பன்முக வாசிப்பு எனப் பலதளங்களில் வாசிக்கும் போக்கையும், அவ்வாறு வாசிக்க கட்டாயப்படுத்தும் x இடமளிக்கும் தன்மையில் உருவாகும். இப்படியான ஒரு வாசிப்பு இலக்கிய வெளியை வாசகனுக்கும் -படைப்பாளிக்கும்உண்டாக்கும்.அப்படிப் பட்ட பிரதிகளே தொடர் வாசிப்புகளுக்கு உட்பட்டுக்கொண்டே இருக்கும்.

பல்கால் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவை
மூன்றினும் முழங்கு ..
(இலக்கணக் கொத்து .7:45-47)

என்ற சுவாமிநாத தேசிகர் கூறுவது போலத் தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவையார் போன்ற பண்டைக்காலப் பிரதிகள்இன்றும்திரும்பத்திரும்பவாசிக்கப் பட்டும் விவாதிக்கப்பட்டும் வருவதற்கு அப்பிரதிகள் தரும் வாசகனுக்கான பெரு - வெளியே அன்றி (infinity space) தொல்காப்பியர், திருவள்ளுவர், மாணிக்கவாசகர் என்ற பெயர்கள் அல்ல என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

அடுத்து மொழி பற்றி கொஞ்சம் பார்ப்போம். மொழி என்பதை வெறும் கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவியாகப் பார்க்க நாம் பழகியுள்ள இன்றைய சூழலில் ஒரு வினாவிற்கான தெளிவைப் பெறுவது அவசியமாகின்றது. வளர்ந்தவர்களுக்கு மொழி பயன்பாட்டில் பெரிய பிரச்ச னையாக இருக்காது. ஆனால் வளரும் குழந்தை மொழியை எவ்வாறு கற்கின்றது? கருத்தை முதலில் பெறுகின்றதா? சொல்லை முதலில் அறிகின்றதா? என்பன போன்ற வினாக்கள்உள்ளன.உதாரணத்திற்குஅப்பா என்ற சொல்லை முதன்முதலில் கேட்கும் குழந்தைக்கு அப்பா என்ற சப்தம் விளங்குமா? அல்லது தந்தை என்கிற அர்த்தம் (அப்பா என்றால் தனக்கு உயிர் கொடுத்த தந்தை என்கின்ற meaning) விளங்குமா? ஆக இந்த இடத்தில் ஒரு சிக்கல் உள்ளது.

இது போன்றது தான் "நான்" என்ற சொல்லும். "நான் இதை எடுத்தேன்" என்று கூறும் குழந்தைக்கு அவ்வாறு கூறும்போது "நான்" என்ற உணர்வு இருந்திருக்கும் என்று கூறிவிட முடியாது. அதேநேரம் நான் என்ற அர்த்தத்தைக் குழந்தைக்கு மொழி கொடுத்தது[5].நான்என்ற சொல்லோ அல்லது மேலே பார்த்த அப்பா என்ற சொல்லோ மொழி இல்லாவிட்டால் அர்த்தம் இருந்திருக்குமா என்பது மேலும் சிக்கலானது. ஆனால் மொழியியலாளர்கள் மொழியில்லாத ஒரு சிந்தனை என்பதே சாத்தியமில்லை[6] என்கின்றனர். அவர்களது கருத்துப்படி பார்த்தால் நான் என்கிற சொல் ஒரு தனி குறியீடு. அப்படிப் பார்த்தாலும் மேலும் சிக்கல் அங்கு உருவாகின்றது. நான் என்பது ஒலியா? எழுத்தா? அல்லது இலக்கணத்தில்

சுட்டப்பெறும் தன்மை ஒருமையைக் குறிக்கும் நானா? அல்லது மன உணர்வாகிய நானா? எதைக் குறிக்கின்றது என்பதிலும் ஒரு குழப்பம். அதாவது நான் என்ற சொல்லுக்கும் அதன் அர்த்தத்திற்குமான தொடர்பு எத்தகையது என்பதே இங்குப் பிரதானமான கேள்வி.

நான் என்ற அர்த்தத்திற்கு நான் என்ற சொல் பதிலி (subsitute) அல்ல. அதாவது நான் என்ற அர்த்தத்தின் வெளிப்பாடுதான் நான் என்ற சொல். முழு வெளிப்பாடு அல்ல[7] அதாவது நான் என்ற ஒலிக்கும் அர்த்தத்திற்கும் இடையே சிறு இடைவெளி இருக்கிறது. இந்த இடைவெளி (gap) சிக்கலாது. அர்த்தத்தை அப்படியே வெளிப்படுத்த முடியாதா என்றால் முடியாது என்றே நிர்தட்சண்யமான ஒரு பதிலைத்தர வேண்டியிருக்கிறது. படைப்புகள் மற்றும் எழுத்துக்கள் எதுவும் அதன் அல்லது அதை உருவாக்கியவனின் ஏகதேசமான உணர்வை, எண்ணத்தைத்தான் தரமுடியும். இந்த விசயத்தை மொழியியல் சொன்னதிலிருந்து சிந்தனை உலகில் களேபரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆக, "நான்" என்ற சொல் நான் என்ற அர்த்தத்தின் ஒரு குறியீடு என்றார்கள் மொழியியல் வாதிகள்[8].

நான் என்ற சொல்லைப் போன்றதே "நீ" என்பதும். அதாவது அதுவும் ஒரு தனிக் குறியீடு. நான் என்ற சொல் பேசுபவனைச் சுட்டும் பச்சை விளக்கு. நீ என்ற சொல் அவனுக்கு முன் நிற்பானைச் சுட்டும் பச்சை விளக்கு அவ்வளவுதான். இந்த இரண்டு பச்சை விளக்குகளும் தத்தமக் கிடையில் சில உறவுகளை வைத்திருக்கின்றன. இவ்விரு சொற்களும் எதிர்மை என்ற உறவை வைத்திருக்கின்றன. இதைத்தான் அமைப்பு என்று கூறுகிறார்கள். இப்படி மொழிகளுக்கிடையில் சில பல உறவுகள்[9] இருக்கின்றன.

மொழியியலாளர் கூறும் நான் x நீ என்ற எதிர்வுகளின் பின்புலம் பண்டைத் தமிழ்க் கவிதையில் இருந்தே உள்ளது. யாயும் யாயும் யாராகியரே, எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர் (குறு.40) முதல் தற்கால கவிஞர்களான தேவதேவன், கலாப்பிரியா, விக்கிர மாதித்தன், பிரேமா, ஆத்மநாம், பிரம்ம ராஜன் முதலானவர்களின் கவிதைகளில் அமைந்துள்ளதைக் குறித்து ஆராந்துள்ள தமிழவன் நான் து நீ என்ற இந்த அடிப்படையில் தமிழில் தோன்றியுள்ள புதுக்கவிஞர்களின் மொழியை ஆராயலாம், மொழியை ஆராய்வதும் கவிதையை ஆராய்வதும் கவிஞர்களின் மனதை ஆராய்வதும் ஒன்று10 தான் என்கின்றார்.

முகநூலில் தொடர்ந்து பதியப்பட்டு வந்த எஸ் சண்முகத்தின் கவிதைகள் தொகுப்பாக "ஈர்ப்பின் பெருமலர்" என்ற பெயரில் டிசம்பர் 2017 வெளிவந்தது. அக்கவிதைகள் முகநூலில் பதியப்பட்ட போதே உடனுக்குடன் தொடர்ந்து வாசகர்களின் விமர்சனங்களை எதிர்கொண்டது. வாசகர்களின் கருத்துக்களில் அருமை x புரியவில்லை என்பன அதிகம் பதியப்பட்டிருந்தன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

அப்பிரதி பற்றி எஸ்.டி.முகத்துக்குமாரசாமி, ஜமாலன், தமிழவன் போன்றோர் தங்களுடைய விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். அவர்களின் விமர்சனங்களில் சொல்லப்படாத கருத்துக்கள் பற்றிய ஒரு பார்வையை முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்தப் பிரதி முழுவதும் நான் து நீ என்ற அமைப்பு பின்னிப் பிணைந்திருப்பதை அறிய முடிகின்றது. நான் நீ என்ற குறியீடுகளும் அதன் எதிர்வுகள், எதிரிணைவுகள் முதலியன எவ்வாறு அமைந்துள்ளன என்பது குறித்துச் சுருக்கமாக இனிக் காண்போம்.

முகம் x முகவரி

ஈர்ப்பின் பெருமலர் என்ற அந்தப் பிரதியின் முதல் கவிதை முகம், மனம், தோற்றம், உருவம், பிம்பம் என்ற குறியீகளால் கட்டப்பட்டுள்ளது.

என் முகத்தினுள்
சுழன்றாடிக்கொண்டிருக்கிறது
ஒருருவம் சுவாச கதியினில்
சுருங்கியும் விரிந்தும் வெருட்டுகிறது
முன்னும் பின்னும்
நகர்ந்து
மனதின் மீது படிய மறுக்கிறது
நெருக்கமாய் செதில்கள்
அமைந்திருக்கின்றன
நொடியினில் நீர்பெருகி
நிறைக்கிறது முகவெளியை

முகப்புறத்தே யார் நிற்பதென அறியா
புகைந்த தோற்றம்
முகத்து உட்புறத்தே
அசையாதிருக்கின்றது அவ்வருவம்
மெல்ல காற்றினில் புகையென
அடர்கிறது
என் உணர்வுகளின் பிரதிபிம்பங்கள்
அதன்மீது ஊர்ந்து படிகின்றன

எத்தனை விதமாய் சேர்த்து பிரிக்கும்
போக்கில்
என்முகத்தைப் பெருக்கியபடி
அழிக்கிறது
முந்தய முகத்தை
ஆயினும் அழிந்ததில் எஞ்சியவைகளில்
யாவிலும் அச்சாக பொருந்தியிருக்கிறது
இந்நாளின் என் பின்னாளின் முகம்[11]

என்முகம், முந்தைய முகம், முகவெளி, பின்னாளின் முகம் என முகம் என்ற சொல் திரும்பத் திரும்ப வந்து வாசகனின் நினைவலைகளைத் தூண்டிவிடுகின்றது. இறந்தகாலம் நிகழ்காலம் எதிர் வரும் காலம் என்ற முக்காலங்களைத் தன்னுள் கொண்டுள்ள மனிதனின் உள்ளார்ந்த நினைவுளைத் தூண்டுவதன் மூலம் நன்கு தெரிந்த x புதிரான செயல்பாடுகளை முன்பின் பின்முன் எனக் காட்டி விளையாடுகின்றது. முகம் என்பது வெறுமனே புறத்தோற்றம் அன்று. முகம் x முகவரி என்ற இரு எதிர் இணைவுகளை இது தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது முகம் என்றால் வெறுமனே மனிதனின் முகம். முகவரி என்று கருதினால் நான் யார் என்ற முகவரி. இது தத்துவார்த்தமானது. தன்னுடைய முகம் நமக்குமட்டுமல்ல நம்மை பார்க்கும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் நான் யார்? என்கிற முகவரி தன்னைத் தவிர வேறு யாரால் அறிய முடியும். அதைத்தான் இந்தக் கவிதை முன்வைக்கிறது. மனிதனின் அகவயமான சிந்தனையைத் தூண்டிவிடுகிறது. சுருக்கமாகக் கூறினால் சாதாரண பொருளும் x தத்துவார்த்த பொருளும் என்ற இரு எதிரெதிர் இணைவுகளை இக்கவிதை போகிற போக்கில் சொல்லிச் செல்லுகின்றது. முகம் என்று சொல்லுக்குள் முகவரி என்ற இன்மைப் பொருள் மறைபொருளாய் நிற்கிறது எனலாம்.

கவிதைச் சொல்லியின் குரல்

கவிதையில் ஒலிக்கும் குரலில் இருந்து இது ஆண்கவிதை. இதுபெண்கவிதை என்ற பாகுபாட்டைப் பிரித்துப்பார்க்க இயலாத பொதுத்தன்மையில் அமைந்துள்ள கவிதைகளில் விதிவிலக்காகக் கவிதைகளில் இடம் பெற்றுள்ள

தளும்பத் தளும்பத் தேக்கியவனின் முகம்[12]

மற்றும்

பேரதிசயங்களின் நடுவே
விழிதிறவாமல் நடையிடுபவனாய் [13]

மற்றும்,

உன்பெருவனப்பைத் தீட்டி ஓய்ந்த
அவ்விறுதிப் புள்ளியில் மயங்கி நிற்கும்
தனித்தூரிகை நான்
எவ்விடத்தே எவ்வர்ணம் இட்டேன்
என மறந்தேனடி[14]

என்ற வரிகளில் இடம்பெற்றுள்ள ஆணுக்குரிய ஒருமை விகுதியைக் கொண்டு, இது ஆணின் குரல் என்று அடையாளம் காணமுடிகின்றது. மற்றவகையில் இக்கவிதையில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் குறிப்பாகக் காதல் சாயலில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் இடம்பெற்றுள்ள கவிதைச் சொல்லியின் குரல் ஆண் குரல் x பெண்குரல் என்ற அடையாளம் அற்று / வேறுபாடுகளற்று இரண்டிற்கும் பொருந்தும் பொதுத் தன்மை வாய்ந்ததாக உள்ளன. அத்துடன், கவிதைகளுக்குத் தலைப்புகள் எதுவும் தரப்பாடாமையும் கவனிக்க, வாசகர்களின் விருப்பத்திற்குப் பொருள் கொள்ளும் பன்முக தளவாசிப்பிற்கு இடமளிக்கும் பிரதிகளாக இவை அமைந்துள்ளன என சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் துணிந்து கூறலாம். உண்மையில் இவையெல்லாம் இந்தக் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகளில் முக்கிய அம்சங்களாகும்.

நான் x நீ எனும் அமைப்பு

இரவு x பகல், சூரியன் x சந்திரன், நன்மை x தீமை என்ற எதிர்வுகள் போன்றது நான் x நீ என்று ஒலிக்கும் தன்மை x முன்னிலை என்பது. பொதுவாக மக்களின் உரையாடல்களில் இதை நன்கு நாம் அறியலாம். இதை நான் செய்தேன்! நீ என்ன செய்தாய்? என்று ஒருவர் பேசுகின்றார் என்றால்? அவரது மனதை அந்த வார்த்தைகள் வெளிப்படுத்துவதை நன்கு உணரலாம். அந்த வர்த்தைகளின் அர்த்தம் எவ்வளவு வீரியம் கொண்டது என்பதும் அதில் அடங்கும். இவ்வாறு இந்தக் கவிதைகளில் ஒலிக்கும் குரல் மக்களின் சாதாரணமான உரையாடல்களில் ஒலிக்கும் குரல்களுக்கு அப்பால் நின்று ஒலிப்பதை நன்கு அறிய முடிகிறது.

சான்றாக,

என் பார்வையாழியினுள்
உறைந்திருக்கும்
உன் ஒற்றைக் கணத்தை விழுங்க
கயலாய்ப் புரண்டு புரண்டு நீந்தி
வருகிறாய்[15]

மற்றும்

உன் நிறம் கவிந்திருக்கும் அறையின்
விளிம்புகளிலிருந்து வெளியேற தத்தளிக்கிறேன்
மறதியில் விடுபட்ட ஏதோவொரு யூகப் புள்ளியில்
ஜீவிதத்தின் வெதுவெதுப்பாய் நீ
அறையெங்கிலுமாய் என்னை
மூழ்கடித்து விம்முகிறாய்[16]

என்ற இரு கவிதைகளின் வரிகளைச் சுட்டலாம். இந்த இரு கவிதைகளில் முதல் கவிதையில் இடம்பெற்றுள்ள என் x உன் என்ற எதிர்வு வெளிப்படையாக உள்ளது. ஆனால், இரண்டாவது கவிதையில் உள்ள வரிகளில் உன் x (என் அல்லது நான்), நீ x என்னை என்று நான் x நீ என்பது வெளிப்படையாகவும், இன்மை நிலையிலும் என அமைந்துள்ளது. இவ்வாறு நான் து நீ என்ற எதிர்வுகள் முறையே நான் x நீ, நீ x நான், என் x உன், உனது x எனது, என்னில் x உன்னில், என்னுள் து உன்னுள் எனப் பல வடிவங்களில் இத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் இடம்பெற்றுள்ளன. அத்துடன், இவை மேலோட்டமாக வாசிக்கக் காதல் கவிதைகளாகப் பொருள் தருகின்றன. என்றாலும், உண்மையில் காதல் என்ற அம்சத்தைவைத்துக்கொண்டுசமத்துவத்தை மேலோங்கச் செய்யும் கருத்தியலை இக்கவிதைகள் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. அதாவது குடும்பம் / சமூகம் என்ற எதிரிணைவுகளை ஒருசேர வெளிப்படுத்து கின்றன.

நான் x நீ = நாம் எனும் அமைப்பு

கவிதைச் சொல்லியால் வெளிப்படும் நான் x நீ அல்லது நீ x நான் என்பன உண்மையில் தலைவன் x தலைவி அல்லது தலைவி x தலைவன் என்கிற சங்கப் பாடல்களில் ஒலிக்கும் குரல் போன்றுதான் உள்ளது. என்றாலும், கவிதையின் பொருள் அத்துடன் நின்றுவிடவில்லை. காதலையும் தத்துவார்த்தச் சிந்தனையும் இனைத்துக் கவிதையாக்குவதன் மூலம் வாசகனிடம் ரசனையை உண்டாக்கிச் சமூகத்தில் சமத்துவம் நிலைபெற வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகின்றது. அதைச் செய் இதைச்செய்! கட்டளையிடுவதன் மூலம் செய்யாமல், நான் x நீ = நாம் என்ற ஒலிக்குறிப்புகள் மூலம் செய்ய முயல்கின்றது.

அதாவது, தமிழின் பண்டைய இலக்கிய மரபான காதலையும் பக்தியையும் இனைத்துப் புதிய இலக்கிய மரபைக் கட்டமைப்பதன் மூலம் இதைச் சாத்தியப்படுத்த முயல்கின்றது. முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்.. (தேவாரம் 6:25-7) என்று திருநாவுக்கரசர் காதல் வழியாகப் பக்தியை வெளிப்படுத்திய முறை போன்றது இது எனலாம்.
சான்றாக, ஒரு கவிதை

என் சிரசினை நனைக்கிறது நியான் ஒளி
கால்விரல் நுனியினை இருள்கவ்வி இழுக்கிறது
முன்னே நகர்ந்து செல்லும் முகக்கூட்டத்தில்
நிலைகுலைகிறது நினைவின் வேட்டை

என்னிலாழ்ந்து நீந்தும் நீ
என்னை எதிரில் கண்டடைய
இன்னும் எத்துணை ஒளியை
விழுங்குவாய்
பிரகாசமாய் நான் ததும்பி வழிகிறேன்
உன்னில்
என்னில் விளிம்பு விரித்துப் படர்கிறாய்
ஐயத்தில் மெய் கூம்பி அமிழ்கிறேன்
உன்னிலிருந்து விழும் ஒருதுளி
விதிர்க்கிறது
கழன்று உழல்கிறது என் பித்தவுரு

மிதந்துகொண்டிருக்கும்நம் பிரதிமைகள்
ஒன்றையொன்று பரிகசித்த
வண்ணமாயுள்ளன
தீண்டியும் விலகியும்
பேருணர்வெழுப்பும்
உனது விழியசைவினில் என்னுரு
நிலையற்று உழல்கிறது

வழிப்பின்மையின் படப்பப்பில்
இமைகள் துடிக்கின்றன
உள்ளிருக்கும் உன் கருவெளியினில்
நிறைவேற்றத்தின் உள்ளார்ந்த
நிற்சலனம்
என்னை அழைக்கிறது

என் கருவெளியை முற்றிலுமாய்
கரைத்துவிட்டேன் உன்னில்
என்னுடாகவும் உன்னுடாகவும்
பீறிட்டுப் பாயும்
பிரவாகத்தில் இருவரும்
இக்கணம்
நியான் பொட்டுக்களாய்
மினுங்குகிறோம்[17]

இக்கவிதையில் என் x (உன்), என்னில் x நீ, என்னை x (நீ), நான் x உன்னில், என்னில் x (நீ), உன்னில் x என், உனது x என், என் x (உன்), என் x உன்னில், என்னுடாகவும் x உன்னுடாகவும், என்று பாலவாறு நான் x நீ என்ற எதிர்வுகள் மாறிமாறி இடம்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. இவற்றில் அடைப்புக்குறிக்குள் சுட்டப்பெறும் உன், நீ, நீ, உன் என்பன இன்மை வடிவில் உள்ளன.

நான், நீ, என், உன், என்பன நம் அல்லது இருவர் (ரும்) என்ற மையத்தைக் கட்டமைக்கின்றன. இவ்வாறு நான் x நீ அல்லது என் x உன் என்பன வெளிப்படையாகவும் இன்மை நிலையிலும் எதிர்வுகளாக அமைந்து நாம், இருவர் என்ற வெளிப்படையாக அல்லது இன்மை நிலையிலான (மினுங்குகிறோம்) மையத்தைஉருவாக்குகின்றன. இவ்வாறான தன்மையிலான கவிதைகள் பல இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அத்துடன், நான் x நீ = நாம் என்ற மையம் கவிதையில் முதலிலும் இடையிலும் கடையிலும்[17] என்று பல இடங்களில் இடம்மாறி மாறி அமைந்துள்ளதையும் அறியமுடிகின்றன. இவ்வாறான அமைப்பில் அமைந்துள்ளவை அனைத்தும் காதல் கவிதைகளாகத் தெரிந்தாலும் அவற்றைக் காதல் கவிதைகள் என்று மட்டும் குறுகிய பார்வையில் அடைத்துவிட முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ச்சி x துணுக்கு அமைப்பு கொண்ட கவிதைகள்

இந்தக் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளகவிதைகள்தொடர்ச்சிxதுணுக்கு என்ற அமைப்பில் உள்ளன என்றும் அறிய முடிகின்றது. உதாரணமாக,

படபடத்திருக்கும் விழிகள் எட்டிப் பார்க்கின்றன[19]

மற்றும்

எங்கும்
உன்னையே உணர்கின்றன என் விரல்கள்[20]

மற்றும்

இடைவிடாது இரைந்துகொண்டே இருக்கும்
இப்பிறவியைத் துறந்து எவ்வண்ணம் மீள்வேன்[21]

போன்ற வரிகளைக் கூறலாம். இவைத் தனித்தனி துணுக்குகள் போல் வாசிக்கக் கூடியனவாக உள்ளன. இது போன்ற அமைப்பைக் கொண்ட கவிதையில் பல இக்கவிதைத் தொகுப்பில் உள்ளன. இதற்கு மாறானதொடர்ச்சியாக[22] மட்டும்பொருள் கொள்ளும்கவிதைகளும்உள்ளன. இவ்வாறு இருவிதமான அமைப்பில் இக்கவிதைகள் அமைந்துள்ளன. அத்துடன் காதல் கவிதைகள் x காதல் சாராக் கவிதைகள் என்ற இரு பண்புகளைக் கொண்ட கவிதைகள் இந்தக் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. உதாரணத்திற்கு அனிதா.எனத் தொடங்கும் கவிதையைக் கூறலாம். இந்தக் கவிதையில் இடம்பெற்றுள்ள

மகள்
சகோதரி
தோழி
என்னும் வார்த்தைகள்
உன் வரலாற்றுப் பொருண்மையைக் குறிக்கவியலா
தம் போதாமையில் அழிகின்றன[23]

என்ற வரிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவைசமகாலமனிதநேயமற்ற / இரக்கமற்ற பண்புகளின் வெளிப்பாடு. சமூகத்தின் அலட்சியம், காலமாறுபாட்டில் நிகழும் அற்புதங்கள் து அலட்சியங்கள் என நீளும் இக்கவிதைகளில் உள்ளடக்கங்கள் நேற்று x இன்று = நாளை என்ற முக் காலத்தையும் தன்னுள் கொண்டுள்ளன. மேலும், சோகமான அதேநேரம் இரசனையுடன் கடந்து செல்லும் தனிமனித / சமூக நினைவலைகளை முன் x பின், பின் x முன் என்று இடம்மாற்றி மாற்றிக் கூறியிருப்பது வாசகனைத் திரும்பத்திரும்ப வாசிக்கத் தூண்டுகின்றது.

குறிப்பு விளக்கம்

1. ஜமாலன். பிரதியில் கிளைக்கும் பிம்பங்கள், ப.95
2. தமிழவன். படைப்பும்படைப்பாளியும். பக்.32-38
3. மேற்படி ப.38
4. ப.34
5. தமிழவன். தமிழும் மொழிதல் கோட்பாடும். ப.64
6. மேற்படி
7. மேற்படி பக். 64 - 65

8. ,, ,, ப.65
9. ப. 66
10. ப.67
11. சண்முகம், எஸ். ஈர்ப்பின் பெருமலர், ப.27
12. மேற்படி ப.37
13. ப.47
14. ப.56
15. ப.38
16. ப.42
17. பக்.29,30
18. பக். 34,35, பக்.35,36, ப.37, பக்.39,40, பக்.54, 55 போன்றவை நான் x நீ = நாம் என்ற மையம் நோக்கி நகரும் அமைப்பைக் கொண்ட கவிதைகளில் முக்கியமானவையாகும்.
19. ப.61
20. ப.62
21. ப.66
22. பக்.42,43
23. ப.75

துணை நூற்பட்டியல்

1. ஆறுமுகநாவலர்(பதிப்).(1956)இலக்கணக்கொத்து (உரையுடன்), (6 ஆம் பதிப்பு) சென்னை, வித்தியாநு, பாலன அச்சகம்.
2. சண்முகம், எஸ்., (2017). ஈர்ப்பின் பெருமலர், சென்னை, போதிவனம் பதிப்பகம்.
3. தமிழவன், (2019). தமிழும் மொழிதல் கோட்பாடும், மேலும் வெளியீடு, பாளையங்கோட்டை.
4. தமிழவன். (1989). படைப்பும் படைப்பாளியும், பெங்களூர்
5. நாகராசன்,வி(உ.ஆ).(2004).குறுந்தொகை மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
6. ஜமாலன். (2018). பிரதியில் கிளைக்கும் பிம்பங்கள், சென்னை, காலக்குறி பதிப்பகம்.